**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணிப் பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டம்- 2021/2022**

**தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II-**

**LLU6814- தீங்கியல் சட்டம்**

**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**

**திகதி: 16.09.2022** **நேரம்: பி.ப. 03.30 - பி.ப 04.30**

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**பரீட்சை மண்டபத்தில் ஏதேனும் வகையில் குறிப்புகள், அதிகாரபூர்வமற்ற ஆவணங்கள், கைடயக்க தொலைபேசிகள் அல்லது ஏதேனும் இலத்திரனியல் உபகரணங்கள் என்பவற்றை உம்முடன் கொண்டிருத்தல் பரீட்சைக் குற்றமாகும்.**

**ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்க.**

1. பிறரின் கவனயீனத்தில் இருந்து எந்தளவு தூரம் சமூகத்திற்கு பாதுகாப்பு தேவைப்படுகிறது என்ற மதிப்பீட்டைப் பொறுத்து கவனக்கடப்பாட்டின் எல்லையை (ஆங்கிலச் சட்டத்தில்) அல்லது சட்டத் தவறுடைமையின் எல்லையை (உரோம டச்சுச் சட்டத்தில்) நீதிமன்றங்கள் தீர்மானிக்கின்றன. பொதுவாக பெரும்பாலான நியாதிக்கங்களில் நீதிமன்றங்கள் இப்பாதுகாப்பை நபரிற்கு அல்லது உடமைக்கு ஏற்படும் பௌதிக ஊறினாலான இழப்பால் பாதிப்புற்றோருடன் ஒப்பிடும் போது தூய பொருளாதார இழப்பால் பாதிப்புற்றோருக்கு நீட்டிப்பதற்கு தயங்குகின்றன. இதனால் தூய பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கவனயீனமான கூற்றுக்களிற்கான பொறுப்புடைமை தொடர்பான விதிகள் ஆனவை, பிற சந்தர்ப்பங்களிலான கவனயீனத்திற்கு உள்ளவற்றை விட மட்டுப்படுத்தப்பட்டவை ஆகும்.

   இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

   கவனயீனமான கூற்றுக்கள் தொடர்பான விதிகள் ஆனவை பொதுவாக கவனயீனம் தொடர்பானவையிலும் மிக மட்டுப்படுத்தப்பட்டவை என நீர் கருதுகிறீரா என விளக்குக. தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரண்டின் அண்மைய சட்ட அபிவிருத்திகளையும் ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

2. பொதுச் சட்டம் மற்றும் குடியியல் சட்ட நியாயாதிக்கங்கள் இரண்டினதும் நீதிமன்றங்கள் மனநல ஊறு அல்லது நரம்பு மண்டலத் தாக்கம் என்பவற்றை ஏற்படுத்திய பிரதிவாதி ஒருவரின் மீது பொறுப்புடைமையை சுமத்தத் தயங்குகின்றன. இதற்கான காரணங்கள் மனநல நோய்கள் தொடர்பான மருத்துவ அறிவில் காணப்படும் குறைபாடு, காப்பீட்டாளர் அல்லது பிரதிவாதி மீதான சுமை, அதிகரித்த வழக்குகளை ஏற்படுத்துதல், அற்பமான அல்லது பொய்யான வழக்குகள் தொடர்பான பயம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இவை ஐக்கிய இராச்சியம், தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை முதலான நீதிமன்றங்களில் நரம்புமண்டலத் தாக்கத்திற்கான வழக்குகளை இனம்காணல் மற்றும் இது தொடர்பான சட்டத்தை விருத்திசெய்தல் என்பன தொடர்பில் எடுத்துரைக்கப்படுகின்றன என ஆராய்க. பல்வேறு நியாயாதிக்கங்களின் அணுகுமுறைகளை ஒப்பிட்டு, வேறுபடுத்துவதுடன், இப்பொறுப்புடைமையை நீர் எவ்வாறு எடுத்துரைப்பீர் என விளக்குக.

உமது விடையில் நீர் தீர்ப்புச் சட்டங்களை குறிப்பிட வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

*-பதிப்புரிமை பெற்றது-*